**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **CC. 78/2015** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.2.பொய்யாமணி** |
| **Father's Name** | : **ராமன்** |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.02.2021

மு.வி:

நான் பண்ணைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மதியம் 3.00 மணியளவில் எங்கள் தெருவில் முனியாண்டி வகையறாவுக்கும், எங்கள் வகையறாவுக்கு எனது மகன் எங்கள் ஊரைச் சேர்ந்த பெண்ணை கூட்டிச்சென்றான் அதனால் பிரச்சனை இருந்தது. அதன் பின்பு 6மாதம் கழித்து சந்தனமாரியம்மன் கோவில் திருவிழா முடிந்து பூஜை பொருட்களை ஏலம் விட்டபின்பு சம்பவம் நடந்தது. எங்கள் தெரு வழியாக பெருமாயி வந்தபோது நாங்களும், முனியாண்டி வகையறாவும் பிரச்சனை நடந்தபோது எதார்த்தமாக பெருமாயியை பார்த்தபோது அவர் தலையில் காயம் இருந்தது. யார் அவரை காயப்படுத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதன் பின்பு பெருமாயியை உசிலம்பட்டி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)**

கடந்த 22.06.2014ம் தேதி எங்கள் ஊர் சந்தனமாரியம்மன் கோவிலில் இருதரப்பினராக சண்டைபோட்டுக்கொண்டனர் என்றும், மாலை 3.30 மணியளவில் எங்கள் ஊர் மலைச்சாமி டீக்கடை முன்பு பெருமாயி என்பவர் நடந்து சென்றபோது முனியாண்டி, சுப்பையன், பெருமாள், ராஜபாண்டி, தங்கமணி, பாண்டி மற்றும் சேகர் ஆகியோர்கள் விருமாண்டியைப்பார்த்து இந்த தேவிடியா அந்த பிரிவைச்சேர்ந்தவள் தான் என்று திட்டி பாண்டி என்பவர் செங்கல் ஓட்டாலும், முனியாண்டி என்பவர் இரும்பு வாளியாலும், பெருமாயி தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், தங்கமலை கத்தியால் பெருமாயியை குத்தவந்தார் என்றும்,ராஜபாண்டி, சேகர், சுப்பையன், பெருமாள் ஆகியோர்கள் பெருமாயியை கைகளால் உடம்பு முழுவதும் அடித்தார்கள் என்றும், நானும், மீனாம்பாள், ஏசுதாஸ் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் பெருமாயியை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள் என்றும், அதன்பின்பு காயம்பட்ட பெருமாயியை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரிகள் எங்கள் உறவினர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d./ Poyyamani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.